(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.369/2022 PW 1

Name தீபிகா

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

08.09.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் பாட்டி என் பெயரிலும் என் தாயார் பெயரிலும் 2018 செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார். எனக்கு நினைவு தெரிந்த நாளிருந்து எனது தாயார் புத்திசுவாதினம் இல்லாமல் இருக்கிறார். புத்தி சுவாதினம் இல்லாத நபர் ஆவணம் எழுதினால் அது செல்லாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2018ல் எனக்கு 23 வயது இருக்கும். எனது பாட்டியிடம் எனது தாயார் புத்தி சுவாதினம் இல்லாமல் இருக்கிறார் என்றும் அவர் பெயரில் செட்டில்மென்ட் எழுதவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவரது விருப்பத்திற்கு அவர் எழுதினார். செட்டில்மென்ட் பத்திரத்தில் எனக்கு ஒரு பாகமும் எனது தாயாருக்கு ஒரு பாகமும் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. பிரிக்கப்படாத சொத்தாக தான் செட்டில்மென்ட் செய்யப்பட்டது. செட்டில்மென்ட் பத்திரத்தில் எனது தாயார் புத்திசுவாதினம் இல்லாத இருப்பதால் என்னை பாதுகாப்பாளராக நியமித்ததாக அந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஓரளவிற்கு செட்டில்மென்ட் பத்திரத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்து ஒரு வருடம் ஆகிவிட்டதால் அதில் உள்ள விவரம் ஓரளவிற்கு தான் தெரியும். சர்வே எண் 400/26, 400/26பி என்கின்ற சொத்துக்களுக்கு செட்டில்மென்ட் எழுதிவைக்கபபட்டது. 400/26 புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரண்ம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1400 லிருந்து 1500 சதுர அடி வரை இரண்டு புல எண்ணிற்க்கும் சேர்த்து மொத்த விஸ்தீர்ணம் இருக்கும். குறிப்பிட்டு 400/26ல்

எவ்வளவு விஸ்தீர்ணம் இருக்கும் என்று எனக்கு தெரியாது. நான்கு எல்லைகள் எனக்கு தெரியாது. எனது பாட்டி கஜலட்சுமி எனது தாயார் தனலட்சுமிக்கும் மற்றும் அவரது சகோதரியான முதல் பிரதிவாதி சுமதிக்கும் 2017ல் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் வந்த பாகத்தை எனது தாயார் தனலட்சுமி அவரது சகோதரியான முதல் பிரதிவாதி சுமதிக்கு 2018ல் செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாமல் எனது தாயாரை அழைத்து சென்று அவர் வாங்கிகொண்டார். எங்கள் பெயரில் எழுதிவைத்த செட்டில்மென்ட் பத்திரத்தில் மோகன் மற்றும் சாந்தி ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டார்கள். எனது தாயாரின் சகோதரன் மோகன் ஆவார். அவரது மனைவி சாந்தி ஆகும். எனது தாயார் முதல் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் செட்டில்மென்ட் பத்திரத்தில் குறிப்பிட்டு எவ்வளவு விஸ்தீர்ணம் எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியாது. எங்களுடையது பிரிக்கப்படாத சொத்தாகும். முதல் பிரதிவாதி பெயருக்கு எனது தாயார் எழுதிகொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டார் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் முதல் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த வாதசாஆ 3 செட்டில்மென்ட் பத்திரத்தில் எனது பாட்டி கஜலட்சுமி சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் போட்டு வாங்கிய பிறகு எனது பாட்டியின் கையொப்பம் இருப்பது குறித்து நான் கேட்க முயற்ச்சித்தேன் அவரது வயோதிகம் காரணமாக அவர் சரியாக சொல்லவில்லை. அவரது வயோதிகம் காரணமாக அவர் அவ்வாறு மாற்றிமாற்றி பேசினார் என்றால் சரியல்ல. சாட்சி கையொப்பம் போட்ட காரணத்தினால் எனது பாட்டி மாற்றி மாற்றி பேசுவதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனது செட்டில்மென்ட் பத்திரத்தில் எனது தாயாரின் பாகம் போக மீதி இருக்கும் பாகம் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. எனது பெயரில் வருவாய் ஆதாரங்கள் காண்பிக்க எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. வரி ரசீதுகள் எனது பாட்டி கஜலட்சுமி பெயரில் உள்ளது. எனது பாட்டி கஜலட்சுமி தனது இரண்டு

மகளுக்கும் சொத்துக்களை கொடுக்க வேண்டும் என எண்ணியிருந்த சமயத்தில் தவறுதலாக எனக்கும் எனது தாயாருக்கும் சொத்து எழுதிவிட்ட காரணத்தினால் எனது தாயார் தனலட்சுமி அவரது சகோதரி சுமதிக்கு தனது பாகத்தை செட்டில்மென்ட் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரியல்ல. நில அபகரிப்பு பிரிவில் நான் புகார் கொடுத்து உரிமையியல் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்ற காரணத்தினால் அந்த புகார் மனு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். 2020ல் சுமதி தனது மகள் இரண்டாம் பிதிவாதி ராஜலட்சுமிக்கு தானசெட்டில்மென்ட் எழுதியவிவரம் எனக்கு பிறகுதான் தெரியவந்தது. எப்போது தெரியவந்தது என்று ஞாபகமில்லை. எனது தாயார் நல்ல புத்தி சுவாதினத்தில் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் புத்திசுவாதினம் இல்லாமல் இருப்பதாக நான் சொல்லும் காரணத்தினால் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பாளர் நியமிக்காமல் அவர் மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்றாலும் எனவே அதன்காரணமாகவும் எனது வழக்கு தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. செலவு தொகையுடன் தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.